BreastScreen Victoria

**breastscreen.org.au** எனும் வலைத்தளத்தில் முன்பதிவு செய்யுங்கள் அல்லது **13 20 50** எனும் இலக்கத்தினை அழையுங்கள்

மேலதிகத் தகவல்களுக்கு:
**breastscreen.org.au**

**13 14 50** எனும் இலக்கத்தினை அழைத்து BreastScreen Victoria-வுடன் இணைப்பு ஏற்படுத்தித் தருமாறு கேளுங்கள்

மொழியெர்க்கப்பட்ட தகவல்களுக்கு:
breastscreen.org.au/**translations**

செவித்திறன் குறைபாடு அல்லது பேச்சுத்திறன் குறைபாடு உங்களுக்கு இருந்தால் **TTY 13 36 77**- எனும் இலக்கத்தினை அழையுங்கள்

VICTORIA State Government

விக்டோரிய மாநில அரசாங்கத்தினது ஆதரவுதவியை BreastScreen Victoria நன்றியுடன் ஏற்கிறது.

2019

BR11/1223



# உங்களுடைய உடல்நலத்திற்கு முதலிடம் கொடுங்கள்

உங்களுடைய மார்பகப் புற்றுச் சோதனைக்கு முன்பதிவு செய்யுங்கள்.



**breastscreen.org.au** எனும் வலைத்தளத்தில் முன்பதிவு செய்யுங்கள் அல்லது **13 20 50** எனும் இலக்கத்தினை அழையுங்கள்

BreastScreen Victoria

## மார்பகப் புற்றிற்கான ஆபத்து எனக்கு இருக்கிறதா?

விக்டோரியா மாநிலப் பெண்களில் **7** பேரில் **1** பெண்ணுக்கு அவரது வாழ்நாளில் மார்பகப் புற்று ஏற்படும்.

மார்பகப் புற்று ஏற்படும் பெண்களில் பெரும்பாலானோருக்கு இந்த நோய்க்கான குடும்ப வரலாறு **இருப்பதில்லை.**

மார்பகப் புற்று ஏற்படுவதற்கு **வயது** மிகப் பெரிய ஆபத்துக் கூறு.

50+

## மார்பகப் புற்றுச் சோதனை

**இலவசமானது.**

இதற்கு ஏறத்தாழ **10 நிமிடங்கள்** ஆகும்.

இதற்கு **மருத்துவருடைய பரிந்துரை** தேவையில்லை.

**மகளிர் கதிர்வீச்சுப் படப்பிடிப்பாளர்களால்** இச் சோதனை செய்யப்படும்.

**விக்டோரியா மாநிலம் முழுவதிலும்** உங்களுக்கு அண்மையிலுள்ள மருத்துவ நிலையத்தில் இந்த வசதி கிடைக்கும்.

## மார்பகப் புற்றுச் சோதனை என்றால் என்ன?

மார்பகப் புற்றுச் சோதனை (அயஅஅழபசயஅ) என்பது மார்பகத்தின் எக்ஸ்-ரே படம் ஆகும். பார்க்க இயலாத அல்லது தொட்டுப்பார்த்து உணர இயலாத அளவிற்குச் சிறியதாக உள்ள புற்றுகளை மார்பகப் புற்றுச் சோதனை மூலம் அறிய இயலும். ஆரம்பத்திலேயே இதைக் கண்டுபிடித்து நல்ல சிகிச்சைகளை மேற்கொள்வதன் காரணமாக பல பெண்கள் மார்பகப் புற்றிலிருந்து பிழைக்கின்றனர்.

## மார்பகப் புற்றுச் சோதனை எனக்குத் தேவையா?

ஆரம்பத்திலேயே இதைக் கண்டுபிடிப்பது உயிரைக் காக்கும்.

### உங்களுடைய வயது 50-74-க்கு இடைப்பட்டதா?

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நீங்கள் மார்பகப் புற்றுச் சோதனையை மேற்கொள்ள வேண்டும்.

### உங்களுடைய வயது 40-களில் இருக்கிறதா அல்லது 75-க்கும் மேற்பட்டதா?

மார்பகப் புற்றுச் சோதனை உங்களுக்கு ஏற்றதா என்று தெரிந்துகொள்ள உங்களது மருத்துவருடன் பேசுங்கள்.

### நீங்கள் 40 வயதிற்குக் கீழ்ப்பட்டவரா?

40 வயதிற்குக் கீழ்ப்பட்ட பெண்களுக்கு மார்பகப் புற்றுச் சோதனையால் பலன் இருக்காது.

## மார்பகப் புற்றைப் பற்றி அவதானமாக இருங்கள்

- உங்கள் மார்கபகங்கள் இயற்கையாகவும், சாதாரணமாகவும் எப்படி இருக்கும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். அசாதாரணமான மாற்றங்கள் எதையும் நீங்கள் அவதானித்தால் உங்களுடைய மருத்துவரைப் பாருங்கள்.
- உங்களுக்கு மார்பகப் புற்று ஏற்படுவதற்கான ஆபத்துக் கூறு மற்றும் மார்பகப் புற்றுச் சோதனையை நீங்கள் மேற்கொள்வதற்கான தேவை ஆகியவற்றைப் பற்றி உங்களுடைய மருத்துவரைக் கேளுங்கள்.

**breastscreen.org.au** எனும் வலைத்தளத்தில் முன்பதிவு செய்யுங்கள் அல்லது **13 20 50** எனும் இலக்கத்தினை அழையுங்கள்